www.tamilarangam.net

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

EPRLF

# அராஜகத்தின் அனைத்து வடிவங்களையும் கண்டிப்போம்!

பாரிசில் இருநது வெளியாகின்ற "பாரிஸ் ஈழநாடு" பத்திரிகை அலுவலகம் எரியூட்டப்பட்ட சம்பவத்தை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். யாழ்ப்பாணத்தில் " ஈழநாடு" பத்திரிகை அலுவலகம் அன்று விடுதலைப் புலிகளால் தாகர்க்கப்பட்டதும் இப்போது நடந்திருக்கும் சம்பவமும் வேறுபட்டவையல்ல. மாகாண அரசாங்க ஆட்சிக் காலகட்டத்தில் வடக்குக் கிழக்கில் புலிகளால் பத்திரிகைகள் மீதும் பத்திரிகையாளர்கள் மீதும் நடாத்தப்பட்ட பல வன்முறைத் தாக்குதல்களுக்கான பழிகள் புகலிடத்தில் எம்மீது சுமத்தப்பட்டன. இப்போது மக்களுக்கு இத்தகைய அராஜகச் செயல்களின் ஒட்டுமொத்தக் குத்தகைக்காரர் யார் என்பது புரிந்திருக்கும்.

"பாரிஸ் ஈழநாடு" பத்திரிகையின் கருத்துக்கள் பலவற்றோடு நாம் உடன்பட்டவர்கள் இல்லை. ஆனால் கருத்துமுரண்ணபாடுகளை வன்முறைமூலம் தீர்த்துக்கொள்வதிலும் எமக்கு உடன்பாடு இல்லை. மாத்தையா-பிரபாகரன் பிரச்சனையை தீர்க்கும் வழிஅராஜகமோ அன்றி அதற்கான களம் "பாரிஸ் ஈழநாடோ" அல்ல. தாயகத்தில் வன்முறையை விதைத்து எம்மக்களின் வாழ்வை நிர்மூலம் செய்து வரும் புலிகள் இன்று புகலிடத்திலும் வன்முறை வித்துக்களை விதைக்க முற்பட்டிருப்பது எதிர்காலத்திற்கான அபாய அறிவிப்பு ஆகும். தாயகத்தில் அடக்கு முறை கால்களின் கீழ் பத்திரிகைகள் சுதந்திரமாக வரமுடியாத நிலை இருந்தது. இப்போதோ புகலிடத்திலும் இந்த அடாவடித்தனம் பரவி இருக்கிறது. - கனடாவில் "தாயகம்" பத்திரிகை புலிகளின் பல் வேறுபட்ட அடக்கு முறைகளுக்கு உள்ளாகியது. பின்னர் கனடாவில் "செந்தாமரை" பத்திரிகையின் ஆசிரியர் ஜெயராஜ் புலிகளால் தாக்கப்பட்டார். விற்பனை நிலையங்கள் எமது பத்திரிகைகளை வைத்திருக்கக் கூடாது என புலிகளால் மிரட்டப்பட்டன. ஏன் பாரிஸ் 9 இல் அமைந்திருந்த எமது அலுவலகம் கூட தீ வைக்கப்பட்டது. இப்போது இத்தகையதொரு அராஜக நிகழ்வே "பாரிஸ் ஈழநாடு" மீதும் நிகழ்த்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பாரிஸ் ஈழநாடு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய எமக்கெதிரான தொடர்ச்சியான சேறடிப்புகளிலும் புலிகளுக்கான வக்காலத்து வாங்கல்களிலுமே ஈடுபட்டு வந்தது. நடு நிலை என்ற பெயரில் புலிகளின் வன் செயல்கள் குருட்டுத்தனமாக ஆதரிக்கப்பட்டன. மற்றவனை பாதிக்கும் வன்முறை நம்மை நோக்கிப் பாயும்போதுதான் அதன் கொடுமை நமக்குப்புரியும். வன்முறையினால் அதுவும் புலிகளின் வன்முறையினால் மிக மோசமாக நசியுண்டவர்கள் நாம். அதனாலேயே ஓர் அரசியல் இயக்கம் என்ற வகையில் அனைத்து வன்முறைகளையும் கண்டிக்கிறோம்.

**பிரன்ஸ் வாழ் தமிழ் பேசும்மக்களே:**
**1994,** ஆரம்பித்த இரண்டு வாரங்களுக்குள் நம்மவர் தொடர்பான இரண்டு வன்முறைகள் நடந்து விட்டன. வெளிநாட்டவர்களுக் கெதிரான வெறுப்பு அலைகள் வேகமாக பரவிவரும் இக்கால கட்டத்தில் தமிழ் பேசும்மக்களும் வன்முறையாளர்கள் என முத்திரை குத்தப்பட்டால், புகலிடத்திலும் எமது வாழ்வு கேள்வி க்குறியானதாகிவிடுவதுடன் நமது உரிமைப் போராட்டத்திற்கான சர்வதேச ஆதரவையும் இழந்து விடுவோம். இவற்றைப் புரிந்து கொண்டு "பாரிஸ் ஈழநாடு" மீது நடாத்தப்பட்ட அராஜ கத்தை அனைவரும் சேர்ந்து கண்டிப்பொம்.

வன்முறையின் அனைத்து வடிவங்களையும் நிராகரிப்போம்.

வாழுகின்ற நாட்டின் சட்டதிட்டங்களை மதிப்போம்.

மக்கள் மீது யுத்தத்தைதிணிக்கும் அனைத்து செயல்களையும் கண்டிப்போம்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சர்வதேசக்கிளைகளின் ஒன்றியத்தினால் பிரசுரிக்கப்பட்டது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்